"In Clause 1, in sub-clause (1), for the expression "Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Act 1990", *substitute* the exp ession 'Tamil Nadu General Sales Tax (Amendment) Act, 1991."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 43/1990) திருத்தப் பெற்றபடி நிறை வேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1990)*ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

---

* 23-8-1990ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1991 சனவரி 22]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 1 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்ண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

"In Clause 1, in sub-clause (1) for the figures "1990" *sbbstitute* the figures "1991".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''பிரிவு 1 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1991 சனவரி 22]

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1990) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

16-15 மணி

(இ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

'' 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1991) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

திரு. கே. ஆர். சுந்தரம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன் மொழியப் பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவில் என்னுடைய கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். மாநகராட்சியில் உள்ள தனி அலுவலர்களின் ஆயுட்காலத்தை நீட்டிக்க வகை செய்வது என்பதை, அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நிலை இல்லாத காரணத்தால் அதை நீட்டிப்பதை, ஓரளவுக்கு நியாயம் என்று நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அதே போல் உள்ளாட்சி மன்றங்களில் இட ஒதுக்கீடு சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. ஆனால் நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களினுடைய காலம் இந்த மார்ச் மாதம் 3-ந் தேதி முடிவடைவதையொட்டி ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி தேர்தலுக்கு ஏற்பாடு செய்து, அதுவரையில் தனி அலுவலர்களை நியமனம் செய்து, அந்த வகையில் வைக்கப்பட்டிருக்கிற ஆலோசனையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ள வில்லை. எனவே அதை ஆட்சேபித்து எதிர்க்கிறோம் நாங்கள். ஏனென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த அமைப்புகள் இருப்பதுதான் நல்லது. தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருந்த நிலைமை நமக்குத் தெரியும். 1979 முதல் 1986 வரையில்

* 21-1-1991ஆம் நாளிட்டதமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.